# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 243/மா/2022

**நாள்: 25 .01.2023**

| | | |
|---|---|---|
| திரு. M. அஸ்வின்குமார்,<br>திருவேற்காடு, சென்னை. | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர், ஆவடி மாநகராட்சி<br>ஆவடி | – | எதிர்மனுதாரர் |

சென்னை, திருவேற்காடு, பெருமாள் அகரம் கதவு எண்.11 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. அஸ்வின்குமார் என்பவரின் 29.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.11..2022–ல் பெறப்பட்டு 243/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, திருவேற்காடு, பெருமாள் அகரம் கதவு எண்.11 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. அஸ்வின்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 29.11.2022 நாளிட்ட தனது மனுவில் :

ஆவடி மாநகராட்சி கடந்த 2014 முதல் 2018 வரை குப்பைகளை சேகரிக்க ஆட்கள் சப்ளை செய்யும் கிரீன் வாரியர்ஸ் ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் புதிய ஒப்பந்தம் கோராமல் டெண்டர் டிரான்ஸ்பரன்சி சட்டத்தை மீறி வழங்கப்பட்டதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க 08.02.2022 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலம் உத்தரவு வழங்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்விசாரணைக்கு ஆஜரான காலக்கட்டத்தில் சுகாதார ஆய்வாளர் திரு.அப்துல் ஜப்பார் அவர்கள் விசாரணைக்கு சுகாதார அலுவலராக பொறுப்பு ஒரு வருடமாக பதவி வகித்துள்ளார்.

மேலும் 2018 முதல் 2022 வரை பதவி வகித்த திரு. பா. நாராயணன் மற்றும் திரு.சரஸ்வதி ஆணையாளராக இருந்த காலகட்டத்தில் மேற்கண்ட கிரீன் வாரியர்சுக்கு முறைகேடாக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதே குற்றம் தொடர்ந்துள்ளது. ஒரு மாதம் சுமார் 800 ஆட்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் வெறும் சுமார் 200 ஆட்கள் மட்டுமே களத்தில் பணிபுரிந்து உள்ளனர். மேலும் ஆவடி மாநகராட்சி மூலமாக 1 கோடியே 10 லட்சம் கிரீன் வாரியர்ஸ்சுக்கு பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவுப்படி சுகாதார ஆய்வாளர் திரு.அப்துல் ஜப்பார் மற்றும் அப்போதைய ஆவடி மாநகராட்சி ஆணையர்

திரு.நாராயணன் மற்றும் சரஸ்வதி அவர்களை விசாரணை நடத்தி தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே 2019 முதல் தற்போது வரை தகுதியில்லாத கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் மீது உள்ளாட்சி மாமன்ற நடுவர் மன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் மாதம் 1,10,00,00 மூன்று ஆண்டுகளில் 36 கோடி மூன்று வருடங்களுக்கு 2019 முதல் 2022 வரை ஊழல் முறைகேடு நடைபெற்றுள்ளது. இக்காலகட்டத்தில் ஆணையராக இருந்த நாராயணன், சரஸ்வதி, சுகாதார ஆய்வாளர் பொறுப்பு அலுவலராக இருந்த திரு.அப்துல் ஜப்பார் அவர்களை விசாரணை செய்து கோப்புகள் அடிப்படையில் தவறு செய்ததில் பொதுமக்கள் பணம் மோசடி ஈடுபட்டதால் ஊழல் வழக்கில் தண்டனை மற்றும் கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் ஒப்பந்தத்தை ரத்து செய்து புதிய ஒப்பந்தம் டெண்டர் விடுமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் உள்ளாட்சி நடுவர் மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 06.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. மனுதாரர் 13.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

01.01.2017 முதல் 31.12.2018 ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஆவடி மாநகராட்சிப் பகுதியில் குப்பைகளை அகற்ற Green Warriors என்ற தகுதியில்லா நிறுவனத்திற்கு ஏற்கனவே முறைகேடாக ஒப்பந்தம் அளிக்கப்பட்டது தொடர்பாக வேறொரு மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டதின் பேரில், விசாரணைக்குப்பின்னர் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தால் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோராமல், டெண்டர் விதிகளை பின்பற்றாமல் இன்று வரை தொடர்ந்து மேற்கண்ட Green Warriors என்கின்ற நிறுவனத்திற்கே குப்பை அள்ளும் பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டு வருகிறது. டெண்டர் விதிகளை பின்பற்றாமல் நகரமன்றம் தீர்மானத்தை மட்டுமே பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்புதல் இல்லாமல் மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பெரும் அளவில் முறைகேடு ஏற்பட்டுள்ளது.

எனவே ஆவடி மாநகராட்சியில் குப்பைகளை அகற்றும் பணியை மேற்கண்ட நிறுவனத்திற்கு அளித்துள்ளதை ரத்து செய்யவும், மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோராததால் ஏற்பட்டுள்ள நிதியிழப்பிற்குக் காரணமானவர்களின் மீது நடவடிக்கை எடுத்திடவும், நிதியிழப்பை அவர்களிடமிருந்தே வசூல் செய்து அரசு கஜானாவில் சேர்த்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 12.12.2022 நாளிட்ட கடிதத்தில் " கடந்த 10 நாட்களாக வடகிழக்கு பருவமழையினை ஒட்டிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. டிசம்பர் 9,10 தேதிகளில் வீசிய மாண்டுஸ் புயலின் காரணமாக, புயல் மீட்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் மேற்குறிப்பிட்ட புகார் மனு மீதான விரிவான விளக்கத்தினை தர கூடுதலாக 1 வார கால அளவிற்கு அவகாசம் தருமாறு பணிவுடன் கோரப்படுகிறது என கோரியுள்ளார். ஆணையரது கோரிக்கையை ஏற்று 26.12.2022 நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.12.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) ஆவடி மாநகராட்சியின் சுகாதார அலுவலர் 26.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

“ஆவடி மாநகராட்சியில் குப்பை சேகரித்தல் மற்றும் பராமரிப்புப் பணியாளர்களை ஒப்பந்த முறையில் பணியமர்த்த கிரீன் வாரியர்ஸ் என்கின்ற நிறுவனத்திற்கு **11.01.2019** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் உத்தரவின்படி ஒப்பந்தப்பணி அளிக்கப்பட்டுள்ளது. முறையான வங்கி உத்தரவாதம் அளித்துள்ள அந்நிறுவனம் தற்போது வரை பணியாளர்களை அளித்து வருகிறது. ஒப்பந்தப்பணியாளர்களுக்கான வருகைப்பதிவேடு இரண்டு முறைகளில் Bio metric மற்றும் பதிவேட்டின் மூலம் பராமரிக்கப்படுகிறது.

மேலும் **2018**ல் கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு, **01.01.2019** முதல் **31.01.2023** வரையிலான காலகட்டத்திற்கு புதுப்பிக்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே, உள்ள வெளிக்கொணர்வு முறையில் ஆட்களை தருவிக்கும் முறையினை மாற்றி டன் அடிப்படையில் பெறப்படும் ஈரக்கழிவுகள், உலர் கழிவுகளை கணக்கில் கொண்டு ஒப்பந்ததாரருக்கு ஊதியம் வழங்கும் அரசின் புதிய திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட புதிய வரைவு திட்டம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்பட்டு நிர்வாக அனுமதி (Administrative Sanction) எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தப்பணியாளர்களுக்கான நிர்வாக அனுமதி (Administrative Sanction) நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து பெறப்படும் வரை, அரசின் கொள்கை முடிவின் படி (Policy matter) ஏற்கனவே உள்ள நிறுவனத்தின் ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொள்ளலாம் என உள்ள நிலையில், மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது என்கின்ற விவரத்தையும், இப்பொருள் குறித்த கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ எவ்வித பின்னேற்பும் (Ratification) பெறப்படவில்லை எனவும், தற்போது வரை ஆவடி மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணியாளர்கள் நியமனத்திற்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் ஆவடி மாநகராட்சியால் கோரப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக ஆவடி மாநகராட்சி ஆணையரின் **23.12.2022** நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

**5)** ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது **23.12.2022** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“ கிரீன் வாரியர்ஸ் என்ற தனியார் நிறுவனம் ஆவடி மாநகராட்சியில் தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் கடந்த **2019** முதல் தருவித்து வருகிறது. மொத்தம் **675** தூய்மை பணியாளர்களை **340** மற்றும் **335** என்ற வீதத்தில் துப்புரவு பணி செய்ய தருவித்து வருகிறது. இதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு **29.12.2018** அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் **01.01.2019**லிருந்து **675** தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் தருவித்து வருகிறது. இது குறித்தான அனுமதி **11.01.2019** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார். இதில் ஏதும் முறைகேடுகள் இல்லை. **675** தூய்மை பணியாளர்களின் வருகைப்பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட **675** தூய்மை பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியத்தொகையான **ரூ.1,10,00,000/-**க்கான முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

மேலும் **2019** முதல் தற்போது வரை மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் தொடர்ந்து பணியாளர்களை தருவித்து வருகிறது. முறையாக வங்கி உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது வங்கி உத்தரவாதத்தின் காலகட்டம் தற்போதும் நடப்பில் உள்ளது. முந்தைய ஒப்பந்த காலகட்டமான **2014** முதல் **2018** வரையில் கணக்கில் கொள்ளும்போது **2017** ஏப்ரல் முதல் **2018** பிப்ரவரி காலகட்டத்தில் முறையான வங்கி உத்தரவாதத்தினை மேற்படி கிரீன் வாரியர்ஸ்

நிறுவனம், அப்போதிருந்த பணிக்காலத்தில் வழங்கப்படவில்லை. புதுப்பிக்காமல் பணி செய்துள்ளது என்று இம்முறைமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இத்தீர்ப்பின் மீதான மேல்நடவடிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் நிலுவையில் உள்ளது. 29.12.2018 அன்று கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட புதிய பணி உத்தரவின்படி, அதாவது 01.01.2019 முதல் 31.12.2019 வரையிலான காலகட்டத்திற்கு பிறகு 31.12.2019 தேதியில் மேலும் ஒரு முறை திரு. இரவிச்சந்திரன் ஆணையாளர் அவர்கள் ஒரு ஆண்டிற்கு, அதாவது 01.01.2020 முதல் 31.12.2020 வரை பணி நீட்டிப்பு அளித்துள்ளார். அதன்பிறகு 21.12.2020 அன்று திரு.பா.நாராயணன், ஆணையாளர் 01.01.2021 முதல் 31.12.2021 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்துள்ளார். இதன் பிறகு 01.01.2022 முதல் 31.03.2022 ஆகிய 3 மாதங்களுக்கும், 01.04.2022 முதல் 31.07.2022 ஆகிய 4 மாதங்களுக்கும் திருமதி.ஆர்.சரஸ்வதி, ஆணையாளர் பணி நீட்டிப்பு செய்து உள்ளார். ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த 2019லிருந்து 2022 வரை வங்கி உத்தரவாதம் நடைமுறையில் இருந்து வந்தது. வங்கி உத்தரவாத கால அளவு 28.12.2018 முதல் 04.04.2022 வரையாகும். மேற்குறிப்பிட்ட வங்கி உத்தரவாத காலம் முடிவடைவதற்கு முன்பாகவே மேற்படி கிரீன் வாரியர் நிறுவனம் 16.02.2022 முதல் 31.12.2022 காலகட்டத்திற்கு ரூ.26,00,000/– க்கான வங்கி உத்தரவாதத்தினை தந்து உள்ளது. எனவே தற்போது வரை வங்கி உத்தரவாதம் நடைமுறையில் உள்ளது.

| வ எண். | ஒப்பந்த காலம் | பணி நீட்டிப்பு வழங்கிய ஆணையாளர் | பணி உத்தரவு வழங்கிய நாள் | பின்னேற்புக்கு விண்ணப்பித்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | 01.01.2019 முதல் 31.12.2019 வரை | திரு.M. ஜோதிகுமார் | 29.12.2018 | நிர்வாக அனுமதி கோரப்பட்ட நாள் 30.11.2018 |
| | | | | அனுமதி கிடைக்கப்பெற்ற நாள்11.01.2019 (ந.க.எண்.32976/j3/2018) |
| 2. | 01.01.2020 முதல் 31.12.2020 வரை | திரு.ந.இரவிச்சந்திரன் | 31.12.2019 | கோப்பில் இல்லை |
| 3. | 01.01.2021 முதல் 31.12.2021 வரை | திரு.பா.நாராயணன் | 21.12.2020 | கோப்பில் இல்லை |
| 4. | 01.01.2022 முதல் எதுவரை என்று குறிப்பிடப்படவில்லை | திருமதி. ஆர்.சரஸ்வதி | 22.12.2021 | 28.01.2022 |
| 5. | 01.04.2022 முதல் 31.07.2022 வரை | திருமதி.ஆர்.சரஸ்வதி | கோப்பில் இல்லை | கோப்பில் இல்லை |

திரு.அப்துல் ஜப்பார், என்பவர் மேற்படி புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டமான 2019–2022 ஜுலை வரை, துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர்(பொ) வகித்துள்ளார். மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்களும், தொடர்புடைய கோப்புக்களை ஆய்வு செய்து தரப்பட்டவை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என சமர்ப்பித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி சுகாதார அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் 01.01.2017 முதல் 31.12.2018 ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஆவடி மாநகராட்சிப் பகுதியில் குப்பைகளை அகற்ற Green Warriors என்ற தகுதியில்லா நிறுவனத்திற்கு ஏற்கனவே முறைகேடாக ஒப்பந்தம் அளிக்கப்பட்டது தொடர்பாக வேறொரு மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டதின் பேரில், விசாரணைக்குப்பின்னர் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தால் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோராமல், டெண்டர் விதிகளை பின்பற்றாமல் இன்று வரை தொடர்ந்து மேற்கண்ட Green Warriors என்கின்ற நிறுவனத்திற்கே குப்பை அள்ளும் பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டு வருகிறது. டெண்டர் விதிகளை பின்பற்றாமல் நகரமன்றம் தீர்மானத்தை மட்டுமே பெற்று நகராட்சி நிர்வாக

ஆணையர் ஒப்புதல் இல்லாமல் மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பெரும் அளவில் முறைகேடு ஏற்பட்டுள்ளது. எனவே ஆவடி மாநகராட்சியில் குப்பைகளை அகற்றும் பணியை மேற்கண்ட நிறுவனத்திற்கு அளித்துள்ளதை ரத்து செய்யவும், மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோராததால் ஏற்பட்டுள்ள நிதியிழப்பிற்குக் காரணமானவர்களின் மீது நடவடிக்கை எடுத்திடவும், நிதியிழப்பை அவர்களிடமிருந்தே வசூல் செய்து அரசு கஜானாவில் சேர்த்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

**7)** கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் ஆவடி மாநகராட்சியில் தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் கடந்த **2019** முதல் தருவித்து வருகிறது. மொத்தம் **675** தூய்மை பணியாளர்களை **340** மற்றும் **335** என்ற வீதத்தில் துப்புரவு பணி செய்ய தருவித்து வருகிறது. இதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு **29.12.2018** அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் **01.01.2019**லிருந்து **675** தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் தருவித்து வருகிறது. இது குறித்தான அனுமதி **11.01.2019** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார். **675** தூய்மை பணியாளர்களின் வருகைப்பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது என ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட **675** தூய்மை பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியத்தொகையான ரூ.1,10,00,000/–க்கான முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

முறையாக வங்கி உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது வங்கி உத்தரவாதத்தின் காலகட்டம் தற்போதும் நடப்பில் உள்ளது. கிரீன் வாரியர்ஸ் நிறுவனம் இதற்கு முன்னர் செய்த பணிக்காலத்தில் வங்கி உத்தரவாதத்தினை புதுப்பிக்காமல் பணி செய்துள்ளது தொடர்பாக ஏற்கனவே இம்முறைமன்றம் ஒரு தீர்ப்பு அளித்துள்ளது. இத்தீர்ப்பின் மீதான மேல்நடவடிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் நிலுவையில் உள்ளது. **29.12.2018** அன்று கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட புதிய பணி உத்தரவின்படி, அதாவது **01.01.2019** முதல் **31.12.2019** வரையிலான காலகட்டத்திற்கு பிறகு **31.12.2019** தேதியில் மேலும் ஒரு முறை திரு. இரவிச்சந்திரன் ஆணையாளர் அவர்கள் ஒரு ஆண்டிற்கு, அதாவது **01.01.2020** முதல் **31.12.2020** வரை பணி நீட்டிப்பு அளித்துள்ளார். அதன்பிறகு **21.12.2020** அன்று திரு.பா.நாராயணன், ஆணையாளர் **01.01.2021** முதல் **31.12.2021** வரையிலான ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்துள்ளார். இதன் பிறகு **01.01.2022** முதல் **31.03.2022** ஆகிய **3** மாதங்களுக்கும், **01.04.2022** முதல் **31.07.2022** ஆகிய **4** மாதங்களுக்கும் திருமதி.ஆர்.சரஸ்வதி, ஆணையாளர் பணி நீட்டிப்பு செய்து உள்ளார். ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த **2019**லிருந்து **2022** வரை வங்கி உத்தரவாதம் நடைமுறையில் இருந்து வந்தது. வங்கி உத்தரவாத கால அளவு **28.12.2018** முதல் **04.04.2022** வரையாகும். மேற்குறிப்பிட்ட வங்கி உத்தரவாத காலம் முடிவடைவதற்கு முன்பாகவே மேற்படி கிரீன் வாரியர் நிறுவனம் **16.02.2022** முதல் **31.12.2022** காலகட்டத்திற்கு ரூ.26,00,000/–க்கான வங்கி உத்தரவாதத்தினை தந்து உள்ளது. எனவே தற்போது வரை வங்கி உத்தரவாதம் நடைமுறையில் உள்ளது என ஆணையர் தெரிவித்துள்ளார்.

**2018**ல் கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு **01.01.2019** முதல் **31.01.2023** வரைஉள்ளது. இந்த கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு ஏற்கனவே விதிகளை மீறி சட்டத்திற்கு புறம்பாக வங்கி உத்தரவாதம் காலாவதியான நிலையில் அப்பொழுது ஆவடி மாநகராட்சி ஆணையாளரால் ஒப்பந்த நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்பொழுதும் அதே நிறுவனத்திற்கு மீண்டும் ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டதற்கான காரணத்தையும், நீட்டிப்பு செய்ததற்கான காரணத்தையும் ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒப்பந்தப்பணியாளர்களுக்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து பெறப்படும்வரை அரசின் கொள்கை முடிவின்படிதான் (Policy matter) ஏற்கனவே உள்ள நிறுவனத்திற்கு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது என்ற விவரம் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலும் இல்லை. அரசின் கொள்கை முடிவு என்பது அரசின் விதிகளுக்குட்பட்டு முறையாக பணி செய்யும் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும். அப்படி இருக்கையில் எவ்வாறு

இந்த நிறுவனத்திற்கு அரசின் கொள்கை முடிவை காட்டி ஒப்பந்தம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுளளது என்பதற்கு சரியான காரணங்கள் ஏதும் ஆணையரால் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின்படி திரு. ந. இரவிச்சந்திரன், ஆணையாளர் மற்றும் திரு.பா.நாராயணன், ஆணையாளர் ஒப்பந்தத்திற்கான பணி நீட்டிப்பு வழங்கியமைக்கு பின்னேற்புக்கு விண்ணப்பித்த நாள் கோப்புகளில் இல்லை மற்றும் திரு. ஆர்.சரஸ்வதி, ஆணையாளரால் **01.04.2022** முதல் **31.07.2022** வரை பணி நீட்டிப்புக்கு, பணி உத்தரவு வழங்கிய நாளோ, பின்னேற்புக்கு விண்ணப்பித்த நாளோ, கோப்புகளில் இல்லை என தற்போதைய மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் கோப்புகள் சரியாக பராமரிக்கப்படாதது தெளிவாகிறது. இதிலிருந்து மனுதாரர் தெரிவித்துள்ள முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்பது ஊர்ஜிதமாகிறது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் இது தொடர்பாக தலைமையிடத்து செயற்பொறியாளர் நிலையில் ஒரு குழுவினை அமைத்து மேற்படி கோப்புகள் அனைத்தையும் ஆய்வு செய்து அக்குழுவானது நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிக்கை அளிக்க உத்தரவிடப்படுகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டால் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் மேலும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் நேராதவண்ணம் தக்க நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**<u>All is not well in the entire issue for the following reasons: -</u>**

i. The said "Green warriors" appears to be a tainted organization in as much as this Forum has earlier passed orders in reference ஆணை எண்.**004/மா/2020** நாள்.**08.02.2022** conclusively concluding that the company failed to renew the Bank Guarantee for the period between 11.4.2017 to 13.6.2017 and yet Corporation officials did not initiate action against the "Green Warriors" for its default for reasons best known only to the officials involved.

ii. On a proposal of DMA sent to Government regarding implementation of solid waste Management Rules 2016 in Municipal Corporations and Municipalities through service provider/agencies/contractor based on key performance indicators, the Government in G.O. (Ms)No.116 MAWS (ME.3) Dept. dt. 24.08.2022, among others, issued the following orders:-

> The Director of Municipal Administration is permitted to accord permission to the Commissioners of Corporations and Municipalities to engage Service Provider/Contractor/Agency for implementation of solid waste Management activities on contract basis based on the key performance indicators for a period of three years following the Tamil Nadu Tender Transparency Act, 1998 and Rule, 2000.

iii. The Commissioner's report is silent on this point conspicuously. This creates a reasonable doubt in the mind of the Forum as to the genuineness of the practice of perpetuating the tender period at intervals beyond the stipulated time – definition of three years.

iv. Moreover from the DMA, the Avadi Corporation has not obtained any special permission or ratification for such extension of the contract mandate to the "Green Warriors" Agency.

v. As per the report of the present Commissioner, details of letters sent to the DMA for ratification are not available for specific certain periods அதாவது (01.01.2017முதல் 31.12.2018 வரை; 01.01.2020 முதல் 31.12.2021 வரை; 01.04.2022 முதல் 31.07.2022 வரை) on the file leading to suspicions and surmises of integrity on the part of the Corporation body dealing with the subject.

vi. The presumptions of the Sanitary Officer who appeared for hearing in this Forum that a policy is on the anvil on the issue of Solid Waste Management handling afresh and the local body can continue with the present arrangements till Administrative Sanction is obtained have no basis, proof or letter of authority from the Corporation only misleading the Forum taking it for granted. When the Commissioner has not committed in his report to this Forum the Sanitary Inspector cannot endorse at his level. This does not stand to sense and logic.

Hence, the DMA is directed to examine the endless extensions granted to the "Green Warriors" by the Corporation inspite of the serious short comings and defects as pointed out in the earlier order of this Forum and bring out the facts of the mystery and initiate necessary disciplinary action against all the Commissioners and officials concerned without any scope for leniency or misplaced mercy.

The Avadi Corporation has betrayed its favouritism, preferentialism and needless proximity towards the "Green Warriors" Agency by not initiating action for floating of tender at the appropriate time Hence the DMA is instructed to clear the air by definite corrective action in the entire imbroglio.

2023-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள்25–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.M. அஸ்வின்குமார்,
எண்.11, பெருமாள் அகரம்,
திருவேற்காடு,
சென்னை – 600 077.

2)ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

**4)**இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக